# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 219** **நாள் : 30.12.2018**

**சென்னை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை மண்டலம், நேப்பியர் பாலம் அருகில் அமைக்கப்பட்டு வரும் போக்குவரத்து பூங்காப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக சென்னை சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–114, காமராஜர் சாலை, நேப்பியர் பாலம் அருகில் 4,137 ச.மீ. பரப்பளவில் அமைக்கப்பட்டு வரும் போக்குவரத்து விதிகள் மற்றும் குறியீடுகளை விளக்கும் முன்மாதிரி போக்குவரத்து பூங்காப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் 28.12.2018 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இப்பூங்கா அமைப்பதன் முக்கிய நோக்கம், வருங்கால தலைவர்களாக வரப்போகும் சிறார்களுக்கு சாலையில் செல்லும் போது பாதுகாப்புடன் செல்வது, போக்குவரத்து விதிகளை அறிந்து அதனை மதிக்க பயிற்சி அளிப்பது, போக்குவரத்து குறியீடுகள் தெரிந்து அதன்படி, போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறந்த ஓட்டுநர்களாக இருப்பது போன்றவற்றை மனதில் பதிய வைக்கும் விதத்தில் பயிற்றுவிப்பதே ஆகும்.

மேலும், வாகனத்தில் செல்லும்போது சாலையில் பாதுகாப்பாக தலைக்கவசம் அணிந்து செல்வது, குறிப்பிட்ட வாகனப்பாதையில் சீராக செல்வது, மஞ்சள் கோட்டை தாண்டாமல் நிற்பது, குடிபோதையில் வாகனம் ஓட்டாமல் இருத்தல், அதிவேகமாக வாகனம் ஓட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகளை மதித்து நடத்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமில்லாமல், அனைத்து போக்குவரத்து சிக்னல்கள், நடைபாதை, பார்வையாளர் மாடம், மீன்குளம், சாலை உபகரணங்கள் உள்ள போக்குவரத்து பாதையுடன் கூடிய மற்றும் போக்குவரத்து விதிகளை தெரிந்து கொள்ள ஏதுவாக அரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

பூங்காவிற்கு வரும் குழந்தைகள் போக்குவரத்து விதிகள் மற்றும் வாகனத்தினை பாதுகாப்பாக ஓட்டக் கற்றுக்கொள்ளவும், சிறார்கள் விளையாட ஏதுவான சூழலும், பல்வேறு உள்நாட்டு மரங்கள் நடப்பட்டுள்ளதால், சுவாசிக்க சுத்தமான காற்றும் கிடைக்கும். இப்பூங்கா பாதசாரிகளுக்கான போக்குவரத்து விதிகளை அறிந்துகொள்ளக் கூடிய முக்கிய அங்கமாக திகழும். இங்குள்ள நடைபாதை அனைத்து வழித்தடங்களையும் பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு உபகரணங்கள் சிறார்கள் ஆர்வமுடன் மகிழ்வுறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பூங்காவில் திருவாளர்கள் ஹோண்டா மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியா லிமிடெட் நிறுவனம் மூலம் பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR)—ன் ஒரு பகுதியாக உரிய பயிற்சி பொருட்களுடன் கூடிய வழிகாட்டுதல் மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தேவையான பணியாட்களுடன் பல்வேறு சாலை விதிகள் மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த உரிய பயிற்சி அளிக்கவும் மூன்று வருடங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பூங்காப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்த ஆணையாளர் அவர்கள் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**